04.09.2024 ,OS.No.284/2021, D.W.1 - அமீது பாத்திமா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 1965 ம் ஆண்டு பிறந்தேன். வழக்கு தாக்கல் செய்துள்ள வாதி என்னுடைய அக்கா ஆவார். 1 ம் பிரதிவாதி என் தாயார் ஆவார். 2 முதல் 6 பிரதிவாதிகள் என்னுடைய சகோதரர்கள். 7 ம் பிரதிவாதி என் அக்கா ஆவார். எனக்கு 1985 ம் ஆண்டு திருமணம் ஆனது. என்னுடைய மாமனாரும் என் கணவரும் புகாரி டிரேடிங் கம்பெனி என்ற பெயரில் நாச்சியார் காம்பிளக்ஸ்சில் இரும்பு வியாபாரம் செய்து வருகிறார்கள். எனக்கு இரண்டு மகள்கள், ஒரு மகன். அனைவருக்கும் திருமணம் ஆகி விட்டது. என்னுடைய இரண்டு மகள்களும் வெளிநாட்டில் இருக்கிறார்கள். என் மகன் பெங்களூரில் இருக்கிறான். நான் அடிக்கடி வெளிநாட்டில் உள்ள என் மகள் வீட்டிற்கு சென்று வருவேன். என் கல்யாணத்தை என் அப்பா 100 பவுண் நகை போட்டு விமர்சையாக செய்தார் என்றால் சரிதான். நான் ஒரு முறை ஹஜ் பயணம் போய் வந்துள்ளேன். என் மகள் மற்றும் மகன் திருமணத்திற்கு என் சகோதரர்களை அழைத்தேன். அவர்கள் வந்தார்கள். என் சகோதரர்கள் அனைவரும் என் அப்பாவுடன் ஒரே வீட்டில் தான் குடித்தனம் செய்தார்கள். என் அம்மா பால் வியாபாரம் செய்து வந்தார். என் அம்மா எனக்கு நகைகள் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என் அம்மா நகை கொடுத்த விபரத்தை என் சகோதரர்களிடம் நான் சொல்லவில்லை. என் அம்மா சொல்லி இருப்பார்கள். சுமார் 15 பவுண் நகை என் அம்மா கொடுத்தார். என் அம்மா நகை கொடுத்த விபரத்தை சகோதரர்களிடம் சொல்லாதத‌ற்கு காரணம் உண்டா என்றால் இல்லை. அவர் பிரியபட்டு கொடுத்தார். என் அப்பா 1969 ல் என் அப்பா ஒரு சொத்தை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. என் அப்பா எனக்கு சொத்து கொடுத்துள்ளாரா என்றால் கொடுத்துள்ளார். அதற்கு நான் பணம் கொடுத்துள்ளேன். என் அப்பா பத்திர செலவு ஆகும் என்று தான பத்திரம் எழுதி கொடுத்தார். அது எழுதி கொடுத்த தேதி 14.07.2000 மா என்று எனக்கு ஞாபகமில்லை. எனக்கு அக்பர் தெருவில் உள்ள சொத்தை என் அப்பா எழுதி கொடுத்தார். அந்த பத்திரம் பதிவு செய்வதற்கு நான் பதிவாளர் அலுவலகம் செல்லவில்லை. அவர் எழுதி கொண்டு வந்து கொடுத்தார். நான் கடன் கொடுத்தற்கு பதிலாக என் அப்பா தான பத்திரம் எழுதி கொடுத்ததாக

அந்த பத்திரத்தில் துலங்குமா என்றால் துலங்காது. அந்த தான பத்திரத்தில் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. அசன் பாத்துவின் கணவர் பெயர் முகமது அபுபக்கர் மக்கி ஆகும். அவர் தான பத்திரத்தில் பதிவாளர் அலுவலகத்தில் வைத்து இரண்டாவது சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 2000 ம் வருடத்தில் அந்த சொத்தின் மதிப்பு சுமார் ரூ.30 லட்சம் இருக்கும் என்றால் சரியல்ல. ஒரு தட்சின் மதிப்பு ரூ.60 ஆயிரம், மொத்தம் நான்கு அரை தட்சு ஆகும். இந்த வழக்கு தாக்கும் செய்யும் காலத்தில் அந்த சொத்தின் மதிப்பு எவ்வளவு என்று எனக்கு தெரியாது. என் அப்பா தானம் எழுதி கொடுத்த மேற்படி சொத்தை நான் விற்றுவிட்டேன். அதை சுமார் ஒரு வருடம் கழித்து விற்றேன். எவ்வளவு ரூபாய்க்கு விற்றேன் என்று சரியாக ஞாபகமில்லை. அந்த சொத்தின் இன்றைய மதிப்பு ரூ.80 லட்சம் என்றால் எனக்கு தெரியாது. என் அப்பா தான பத்திரம் எழுதி கொடுத்த விபரம் வாதி மற்றும் அசன் பாத்துவிற்கு தெரியுமா என்று எனக்கு தெரியாது. எனக்கும், வாதிக்கும் மன வருத்தம் எதுவும் கிடையாது. வாதி வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் எனக்கு அறிவிப்பு வந்த பின்னர் தெரியும். நான் அறிவிப்பு வந்தவுடன் மற்ற இரண்டு சகோதரிகளிடம் வழக்கு சம்பந்தமாக கலந்து ஆலோசிக்கவில்லை. வாதி மற்றும் என்னுடைய சகோதரர்களிடம் இது சம்பந்தமாக நான் கலந்து ஆலோசிக்கவில்லை. என் அக்காவின் மகனின் திருமணம் சென்னையில் நடந்தது. 2005 ம் ஆண்டு மே மாதம் வாக்கில் நடந்தது. அந்த திருமணத்தில் என் சகோதரர்களும், என் அப்பாவும் கலந்து கொண்டார்கள். நானும் கலந்து கொண்டேன். அந்த நிகழ்ச்சியில் என் சம்மந்தியின் தம்பியும் கலந்து கொண்டார் என்றால் சரிதான். என்னுடைய வழக்கறிஞருக்கு எதிர் வழக்குரை தாக்கல் செய்ய நான் தான் தகவல் சொன்னேன். நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் என்னென்ன விபரம் சொல்லப்பட்டுள்ளது என்று என்னால் தற்போது சொல்ல இயலாது. என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் நான் மற்ற பிரதிவாதிகளுக்காகவும், இந்த நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்வதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் அசன்பாத்து வழக்கறிஞர் மூலம் ஆஜராகி வழக்கை நடத்தவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் என் தாயார் மற்றும் சகோதரர்கள் எதிர்வழக்குரையில் என்ன கட்சி செய்கிறார்கள் என்ற

விபரம் எனக்கு தெரியும். வாதி பிராதில் கூறியுள்ள விபரங்களில் எது உண்மை என்றால் அவர் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மையாகும். என் அப்பா 2 முதல் 6 பிரதிவாதிகள் பெயருக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்த விபரம் தெரியாது. 2005 ம் ஆண்டு மே மாதத்திற்கு பின்னர் என் தகப்பனாருக்கு உடல்நிலை சரியில்லை. அம்மாதிரி 2005 ம் ஆண்டு மே மாதத்திற்கு பின்னர் அவருக்கு உடல்நிலை சரியில்லை என்று எதிர் வழக்குரையிலும், நிருபண வாக்குமூலத்திலும் நான் சொல்லவில்லை. 2005 ம் ஆண்டு மே மாதம் சென்னையில் என் அப்பா திருமணத்தில் கலந்து கொள்ளும்போது திடகார்த்தமாக இருந்தாரா என்றால் அவ்வாற திடகார்த்தமாக இல்லை. அப்போது சற்று உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். அதன்பின்னர் மேலும் சரியில்லாமல் போய்விட்டது. சுமார் இரண்டரை, மூன்று வருடங்களாக உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். அவருக்கு என்ன சிகிச்சை அளிக்கப்பட்டது என்ற விபரம் என் அண்ணனுக்கு தான் தெரியும். என் அப்பாவிற்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது நான் சென்னையில் இருந்து அவரை பார்க்க வந்தேன். வந்த மாதம் ஞாபகமில்லை. அப்போது என் அப்பாவிற்கு யார் வந்துள்ளார்கள் என்று அவருக்கு ஞாபகம் கிடையாது.

கேட்டு கொண்டதிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.